முற்பகல் 11-50

4. கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் மற்றும் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடுகள்)*

5. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சவுந்தரராசன், இன்று காலையில்தான் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள், அது என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன?*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளில் இதே மாமன்றத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. இன்றுதான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நான் என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, என்ன?*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நான் என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நேற்றே இதுகுறித்து பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) திரு. கணேஷ்குமார், என்ன?*

[2015 செப்டம்பர் 3

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற செப்டம்பர் மாதம் ஐ.நா. சபையில், ஈழத்தில் நடைபெற்ற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள், நான் பார்க்கிறேன். (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, என்ன?*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைக் கடற்படையினரால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள், நான் பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன் என்ன?*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டத்தில் திடீரென்று பெய்த மழையால் கொள்முதல் நிலையங்களிலிருந்த நெல் மூட்டைகள் எல்லாம் நாசமாகியிருக்கின்றன. அதைக் கொள்முதல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து இன்று மானியக் கோரிக்கைமீது பேசலாம். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ராஜா, என்ன சொல்லுங்கள்?*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 30-8-2015 அன்று மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட அரிச்சபுரம் ஊராட்சியில், நூற்றுக்கணக்கானோர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செங்குட்டுவன் என்ன? (குறுக்கீடு) எல்லோரும் இப்படிப் பேசினால் எப்படி? பூஜ்ஜிய நேரத்தில் ஒரு கட்சிக்கு ஒருவருக்கு வாய்ப்பு கொடுப்பதுதான் முறை. (குறுக்கீடு)*

திரு. டி. செங்குட்டுவன்: *எனது தொகுதி சம்பந்தமாக நான் பேச வேண்டுமல்லவா!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்படிப் பேசினால், நான் எப்படி அவையை நடத்துவது? (குறுக்கீடு) இதுவெல்லாம் முறையல்ல.*